

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.12.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிருவாகிகளை சந்திக்கும் நிகழ்வில், தாராபுரம் மற்றும் காங்கேயம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிருவாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிருவாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.



துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணைச் செயலாளர் எழில்மாறன் செல்வேந்திரன் ஏற்பாட்டில் திருச்சி உறையூர் செல்வேந்திரன் வளாகத்தில் நடைபெற்ற மாநில அளவிலான சிலம்பம் ஓபன் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள். நிகழ்வில் திருச்சி மாநகர மேயர் மு.அன்பழகன், திரைப்பட இயக்குனர் போஸ்.வெங்கட், நாஞ்சில் விஜயன், மாநகர செயலாளர் மதிவாணன் மற்றும் பலர் உள்ளனர்.

### நமது அரசின் சீரிய முயற்சிகள் மென்மேலும் சிறக்கும் வகையில்

# திருமதி. சுப்ரியா சாகுவின் பணிகள் தொடர - ஐ.நா.விருது பெரும் ஊக்கமாக அமையும்!

### ஐ.நா,விருது பெற்றதையொட்டி – வெளியிட்ட வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க,ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, டிச. 13-

திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப. அவர்கள், காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் சிறப்பாகச் செயல்பட்டமைக்காக ஐ.நா. விருது வழங்கப்பட்டதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், "நமது அரசின் சீரிய முயற்சிகள் மென்மேலும் சிறக்கும் வகையில், திருமதி சுப்ரியா சாகு ஐ.ஏ.எஸ். அவர்களின் பணிகள் தொடர, ஐ.நா.விருது பெரும் ஊக்கமாக அமையும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.



முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப. அவர்களுக்கு ஐ.நா. விருது: தமிழ்நாடு பெருமை கொள்கிறது!**

**காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் உலக அளவில் தமிழ்நாடு சிறப்பான இடத்தைப் பெற ஆர்வத்துடன் உழைத்தமைக்காக UNEP அமைப்பின் Champions Of The Earth விருதினை வென்றுள்ள தமிழ்நாடு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் & வனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப. அவர்களுக்கு எனது பாராட்டுகள்!**

**ஈரநிலப் பாதுகாப்பு, அலையாத்திக் காடுகள் பரப்பை அதிகரித்து வருதல், அருகி வரும் அரிய உயிரினங்களைக் காத்தல், ப்ளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல் உள்ளிட்ட நமது அரசின் சீரிய முயற்சிகள் மென்மேலும் சிறக்கும் வகையில் அவரது பணிகள் தொடர இவ்விருது பெரும் ஊக்கமாக அமையும் என நம்புகிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை நடத்தும் –

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கருத்தரங்கம்!

### தி.மு.க, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கை!

*சென்னை, டிச. 13-*

தி.மு.க. கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் திராவிட இளந்தென்றல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கருத்தரங்கம் இன்று (13.12.2025 - சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் கோவை, சிங்கா நல்லூர் ஸ்ரீ சாய் (விவாகா) திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

காலை 9 மணிக்கு பறை இசை முழக்கமும், கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் அவர்களின் இயக்கப் பாடல்களும், புதுகை பூபாலம் குழுவினரின் கலை நிகழ்ச்சியும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து பேரவை மாநில துணைச் செயலாளர் திருமதி மீனா ஜெயக்குமார் தலைமையில் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் தொடக்க உரையாற்றுவார்கள். கழகத் துணைப் பொதுச் செயலாளர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள். கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் மேனாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி நலத்திட்ட உதவிகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றுவார்கள்.

தொடர்ந்து மாவட்ட திமுக பொறுப்பாளர்கள் துரை செந்தமிழ்ச் செல்வன், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், பாராளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ப. ராஜ் குமார், கே. ஈஸ்வரசாமி, பேரவை மாநில நிர்வாகிகள் எம். ஆர். ஆர். வாசுவிக்ரம் வண்ணை அரங்கநாதன், தில்லைசெல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் கருத்தரங்கில் திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன் அவர்கள் "யாரால்! யாரால்!! யாரால்!!!" என்ற தலைப்பிலும், மூத்த ஊடகவியலாளர் "தமிழ்க்கேள்வி செந்தில்வேல்" திராவிடம் 2.0 ஏன்? எதற்கு? என்ற தலைப்பிலும், பேரவை துணைத் தலைவர் போஸ் வெங்கட் "ஒரு கல் ஒரு தலைமை" என்ற தலைப்பிலும், பேரவைச் செயலாளர் பொள்ளாச்சி மா. உமாபதி "சனாதனச் சத்ரு" என்ற தலைப்பிலும் கருத்துரை நிகழ்த்த உள்ளார்கள்.

பேரவை மாவட்ட அமைப்பாளர் துரை கதிரவன் வரவேற்புரையாற்றுவார், எஸ்.எம்.எஸ். சுதாகரன் நன்றியுரை ஆற்றுவார்.

பிற்பகல் 2 மணி அளவில் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் (எனது) கூட்டம் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர்) தலைமையில் நடை பெறுகிறது.

பேரவைத் துணைச் செயலாளர்கள் கவிஞர் நன்மாறன், எழில்மாறன், செல்வேந்திரன், கே. வி. குப்பம், சி. கோபி, கலைமாமணி ஜாகிர் உசேன், எம் எஸ். ஹரிபாபு, என். எஸ். மாதேஸ்வரன் ஆகியோர் மாநில நிர்வாகிகளுடன் இணைந்து கருத்தரங்கப் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

கழக உடன்பிறப்புகள் அனைவரும் கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கை வாயிலாகத் தெரிவித்துள்ளார்.

### தேர்தல் செயல்முறை சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்!

# இ.வி.எம். செயல்முறை குறித்த முழுமையான வெளிப்படைத் தன்மை வேண்டும்!

### மாநிலங்களவையில் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ வலியுறுத்தல்!

*புதுடெல்லி, டிச.13-*

மாநிலங்களவையில் தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த விவாதத்தில் மாநிலங்களவை உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ பேசியதாவது:-

தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த விவாதத்தில் நாடாளுமன்ற மாநிலங்களவையில் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ பேசியதாவது:-



தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் முக்கியமான விவாதம் நடைபெறுகிறது. இந்திய அரசியலமைப்பின் பகுதி XV, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1950 & 1951, தேர்தல் நடத்தை விதிகள் 1961, மற்றும் வாக்காளர் பதிவு விதிகள் 1960 ஆகியவற்றின் அடிப்படையில் இந்த விவாதம் முன்வைக்கப்பட்டது.

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்**

2024--ல் அனைத்து இயந்திரங்களும் M3 (மூன்றாம் தலைமுறை) இயந்திரங்களாக மாற்றப்பட்டுள்ளன. M3 EVMகளில், வாக்குச்சீட்டு அலகு VVPAT-உடன் இணைக்கப்பட்டு, பின்னர் VVPAT கட்டுப்பாட்டு அலகுடன் இணைக்கப்படுகிறது. வாக்குச்சீட்டு அலகிற்கும் கட்டுப்பாட்டு அலகிற்கும் இடையே நேரடி இடைமுகம் இல்லை என்பது கவலைக்குரிய விஷயமாகும்.

**சின்ன ஏற்றுதல் அலகு பற்றிய கவலைகள்**

வேட்புமனு திரும்பப் பெறுவதற்கான கடைசி தேதிக்குப் பிறகும் வாக்குப் பதிவு தேதிக்கு முன்பும் VVPAT-ல் ஒரு மைக்ரோசிப் செருகப்படுகிறது. இந்த 'சின்ன ஏற்றுதல் அலகு' (SLU) செயல்முறையில் எந்த அரசியல் கட்சியும் பங்கேற்க அனுமதிக்கப்படுவதில்லை. SLU-வின் கலவை, வேலை செய்யும் முறை, செயல்படும் தரவு ஆகியவை அரசியல் கட்சிகளுக்கு அல்லது வேட்பாளர்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

**சிக்மா நிலை குறித்த தவறான தகவல்**

ECI இணையதளத்தில் 99.993% நம்பிக்கை நிலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறாக வழிநடத்துவதாக உள்ளது. 4 சிக்மா நிலை மில்லியனுக்கு 6200 குறைபாடுகள் கொண்டது, இது 99.379% நம்பிக்கை நிலை மட்டுமே. இந்த தவறான அறிக்கை தேசத்தின் ஜனநாயகத்தையே அசைத்துப் பார்க்கிறது.

**சிறப்பு தீவிர திருத்தம்** (SIR)

நடைமுறை சிரமங்கள்

SIR-க்கான காலக்கெடு நியாயமற்றது

BLO-க்கள் தயாராக இல்லை, சரியான பயிற்சி வழங்கப்படவில்லை

படிவங்கள் சரியான நேரத்தில் அச்சிடப்படவில்லை

ஆதார் கட்டாயமில்லை என்றாலும், ECI 11 கூடுதல் ஆவணங்களை கோருகிறது

புகைப்படம் ஒட்டுவது அனைவருக்கும் எளிதானது அல்ல

தமிழ்நாட்டில் லட்சக்கணக்கான வாக்குகளை இழக்க நேரிடலாம்

**சட்டபூர்வத்தன்மை குறித்த கவலை**

SIR-ன் பெயரில் தேர்தல் ஆணையம் செய்வது மக்களின் குடியுரிமையை சரிபார்ப்பதாகும். ஒவ்வொரு வாக்காளரையும் தனது குடியுரிமையை நிரூபிக்கும்படி கேட்கிறது - அந்த அதிகாரம் ECI-க்கு வழங்கப்படவில்லை. டாக்டர் B.R. அம்பேத்கர் அரசியலமைப்பு ஒழுக்கத்தின் தேவையை வலியுறுத்தினார்.

**கோரிக்கைகள்**

**வெளிப்படைத்தன்மை:** EVM செயல்முறை குறித்த முழுமையான வெளிப்படைத்தன்மை

**பொறுப்புணர்வு:** தேர்தல் ஆணையத்தின் செயல்களுக்கு முழுமையான பொறுப்புணர்வு

**முறையற்ற பயன்பாடு தடுப்பு:** வாக்கு பதிவு இயந்திரங்களை முறையற்ற வழியில் பயன்படுத்துவது சாத்தியமற்றதாக ஆக்கப்பட வேண்டும்

புள்ளியியல் நிகழ்தகவு: கையாளுதலுக்கு எந்த சாத்தியமும் இல்லை என்ற முழுமையான உறுதி

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் நமது ஜனநாயகத்தின் அடித்தளமாகும். வாக்களிக்கும் உரிமை ஒவ்வொரு குடிமகனின் மிக அடிப்படையான உரிமையாகும். ஒரு மாநிலத்தில் லட்சக்கணக்கான வாக்காளர்கள் வாக்குரிமை இழக்கும் ஆபத்து எதிர்கொள்ளும் போது, இது நிர்வாக அசௌகரியத்தின் விஷயம் அல்ல - இது உருவாகும் அரசியலமைப்பு நெருக்கடியாகும்.

இந்திய மக்கள் EVM-ல் ஒரு பொத்தானை அழுத்தும்போது என்ன நடக்கிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இந்திய மக்கள் தங்கள் வாக்கு அவர்கள் எண்ணியவாறே பதிவு செய்யப்படுகிறது என்று உறுதியளிக்கப்பட வேண்டும். இந்திய மக்கள் தங்கள் பெயர்கள் அதிகார வர்க்கத்தின் மூலம் வாக்காளர் பட்டியல்களிலிருந்து நீக்கப்படாது என்று நம்பிக்கையாக இருக்க வேண்டும்.

நமது தேர்தல் செயல்முறையின் நேர்மை அனைத்து சந்தேகங்களுக்கும், அனைத்து கேள்விகளுக்கும் அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். நமது ஜனநாயகத்தை வலிப்படுத்த ஒன்றாக பணியாற்றுவோம்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ உரையாற்றினார்.

### தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட

## மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) ஆலோசனைக் கூட்டம்!

### கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அறிக்கை!

தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) – சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) ஆலோசனைக் கூட்டம் இன்று (13-12-2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் தலைமையில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சிறப்புரையாற்றிட கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொள்ள நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் சட்டத்துறையால் (DLC) நியமிக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) இருவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: SIR குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள் : 01-12-2025.

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை



கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம், கே.டி.சேந்தபுகழன் ஏற்பாட்டில் ரத்ததானம் வழங்கும் நிகழ்ச்சியை மாவட்ட கழக செயலாளரும் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் கே.இ.பிரகாஷ், வி.சி.சந்திரகுமார், ஜெ.வீரமணி, குமார் கே.முருகேஷ், ஆ.செந்தில்குமார், ப.க.பழனிச்சாமி, டி.எஸ்.குமாரசாமி, மணிராசு, வி.செல்வராஜ், அக்னி டி.சந்திரசேகரன், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், பொ.ராமச்சந்திரன், சசிக்குமார், அந்தியூர் இரா நித்தின், அன்பரசு, சீனிவாசன், பார்த்திபன், ரமேஷ், சதீஷ்குமார், வெங்கடேஷ், வினோத், தினேஷ், சண்முகம், கௌஷிக், சுரேஷ், குகன், கவியரசு, அரவிந்த், சுதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில்

# விவசாயிகளுக்கான திட்டங்கள் முறையாகச் செயல்படுகிறதா?

### மக்களவையில் - தர்மபுரி ஆ. மணி கேள்வி!

*புதுடெல்லி, டிச.13-*

தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கான திட்டங்கள் முறையாக செயல்படுகிறதா? மக்களவையில் தருமபுரி எம்.பி.ஆ.மணி எழுப்பிய கேள்வி வருமாறு:-

தமிழ்நாடு முழுவதும் தருமபுரி மாவட்டம் உட்பட டிஜிட்டல் வேளாண்மை இயக்கத்தினை ஒன்றிய அரசு முறையாக செயல்படுத்தி வருகிறதா?



தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் அடையாள அட்டை, புவியியல் கிராம வரைபடங்கள், டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பு(DCS) உள்ளிட்ட பணிகளின் நிலை குறித்த விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் ரபி 2024-2025 காலத்தில் புவிசார் குறிப்பு மற்றும் டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பு(DCS) முடிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் நிலஅளவை செய்யப்பட்ட நிலங்களின் விபரங்கள் என்ன?

அரசாங்கத்தால் வழங்கப்படும் தொழில் நுட்ப மற்றும் நிதி உதவி, SCA நிதி, PMKISAN னின் நிர்வாக நிதி, கேம்ப் மோட் அணுகு முறை, மற்றும் NEGPA உள்ளிட்ட திட்டங்கள் முறையாக தருமபுரி மாவட்டத்திற்கு சென்றடைந்துள்ளதா? இத்திட்டங்களின் கீழ் தருமபுரி மாவட்டத்திற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகளின் பதிவேட்டை சரியான நேரத்தில் உருவாக்கி அதனை சரிபார்க்க ஒன்றிய அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்று ஒன்றிய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் ராம் நாத் தாக்கூரிடம் மக்களவையில் தருமபுரி எம்.பி.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.



சேலம், தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் நேற்று முன்தினம் (10.12.2025) நடைபெற்ற அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி ஆகியோர் உள்ளனர்.